இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 289 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 16– செவ்வாய்க்கிழமை 30 மே 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 289 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 16 - Tuesday 30 May 2023 - Chennai 12 Pages ₹ 5.00

## நிர்வாக உதவி - மனித ஆற்றல் இரண்டும் இணைந்து கிடைக்கும்

# தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடு செய்க!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.5.2023) டோக்கியோவில் நடைபெற்ற ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்ட மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, ஜப்பானிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடுகள் மேற்கொள்ள அழைப்பு விடுத்து உரையாற்றினார். இந்த மாநாட்டில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, Ehime Prefecture துணை ஆளுநர் ஹிடிகி தனாகா (Mr. Hideki Tanaka), தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டு துணைத் தூதர் மாசாயுகி டகா (Mr. Masayuki Taga) மற்றும் ஜப்பான் நாட்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஜப்பான் தொழில் நிறுவனங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

**டோக்கியோ, மே 30-**

**‘நிர்வாக உதவி - மனித ஆற்றல் இரண்டும் இணைந்து கிடைக்கும் தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடு செய்க’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜப்பான் தொழில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்தார்.**

ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்ட மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, ஜப்பானிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடுகள் மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார்.

23.5.2023 அன்று சிங்கப்பூர் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனது இரண்டு நாள் சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது ஜப்பானில் அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக, நேற்று (29.5.2023) டோக்கியோவில் நடைபெற்ற ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் (Japan External Trade Organization - JETRO) இணைந்து நடத்தப்பட்ட மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, ஜப்பான் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடு செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் கேட்டு அழைப்பு விடுத்தார்.

இம்மாநாட்டில் சுமார் 200 ஜப்பானிய நிறுவனங்களின் மூத்த மேலாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

எங்களுடைய ஜப்பான் பயணத்தில் இன்று தலைநகரான டோக்கியோவுக்கு வந்துள்ளோம். டோக்கியோவில் நிலநடுக்கம் ஏற்பட்ட செய்தியறிந்து, அதிர்ச்சியாகப் பலரும் என்னிடம் நிலைமை என்ன என்று கேட்டார்கள். “டோக்கியோவைப் பொறுத்தவரை இது சாதாரணச் செய்தி! இங்கே நிலநடுக்கம் எரிமலை வெடிப்புகள் என்பவை அடிக்கடி நடப்பவை, அதற்கிடையே தான் துணிச்சலோடு மக்கள் வாழ்கிறார்கள், செயல்படுகிறார்கள், வெற்றியும் பெற்றுக் காட்டுகிறார்கள்” என்றேன்.

### நெருக்கடியை வெல்பவர்கள் ஜப்பானியர்கள்!

இயற்கை நெருக்கடியாக இருந்தாலும் செயற்கை நெருக்கடிகளாக இருந்தாலும் அதனை வென்று காட்டுபவர்கள் ஜப்பானியர்கள்!

> **கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே 5,596 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 4,244 நபர்களுக்குவேலை வாய்ப்பு என்ற வகையில், 5 ஜப்பானிய நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.**

இரண்டு நாட்கள் சிங்கப்பூரிலும் மூன்று நாட்களாக ஜப்பானிலும் இருக்கிறேன். இங்கு பார்க்கும் நிறுவனங்களின் அதிபர்கள் தலைவர்கள் பணியாளர்கள் அலுவலர்கள் ஆகியோர் முகத்தில் நான் பார்க்கும் உற்சாகம் என்பது எனக்கு மிகப்பெரிய நம்பிக்கையையும் புத்துணர்ச்சியையும் உருவாக்கி இருக்கிறது.

ஜப்பான் நாட்டின் தலைநகராக உலகின் மிகப்பெரிய பொருளாதார நகரங்களில் ஒன்றாக உலகப் புகழ் பெற்ற 500 நிறுவனங்களில் 51 நிறுவனங்களின் தலைமையகங்கள் இயங்கும் நகராக டோக்கியோ விளங்குகிறது.

### உழைப்பும் திறனும் உயர்ந்துநிற்கும் டோக்கியோ!

இரண்டாம் உலகப் போரில் தாக்குதலுக்கு உள்ளானாலும், உழைப்பும் செயல்திறனும் கொண்டு உயர்ந்து நிற்கும் டோக்கியோ நகருக்கு வந்திருப்பதை பெருமையாகக் கருதுகிறேன்.

- ★ நாடு தழுவிய போக்குவரத்து,
- ★ பெரும் கடைகள் மற்றும் உணவகங்கள்,
- ★ உலகப் புகழ்பெற்ற சுற்றுலா தலங்கள்,
- ★ புத்துணர்ச்சி ஊட்டும் இயற்கை இடங்கள்
- ★ வரலாற்று நினைவுச் சின்னங்கள்,
- ★ உயரமான வானளாவிய கட்டடங்கள்,
- ★ தனித்துவமான அருங்காட்சியங்கள் என அமைந்து ஒரு நகரம் எப்படி அமைய வேண்டும் என்பதை டோக்கியோ எடுத்துக் காட்டுகிறது.

நகரத்தின் அனைத்து எரிசக்தித் தேவைகளும், ஹைட்ரஜன், காற்றாலை மின்சாரம் மற்றும் சூரியஒளி எரிசக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தியால் பூர்த்தி செய்யப்படுவதை கண்டு நான் வியந்து போகிறேன். இது எனது கனவுகளின் அகலத்தை பெரிதாக்குகிறது. எங்கள் தமிழ்நாட்டை எப்படி உருவாக்க நினைக்கிறோமோ அந்தக் கனவுப் பரப்பை நான் இங்கு பார்க்கும் காட்சிகள் அதிகப்படுத்தி இருக்கிறது. இதனை எனது வாழ்நாளில் எப்போதும் மறக்க முடியாது.

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம், நாங்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஒன்றை மிகப் பெரிய அளவில் தமிழ்நாட்டில் சென்னையில் நடத்திட திட்டமிட்டு இருக்கிறோம்.

உங்களை அந்த மாநாட்டிற்கு வரவேற்றிடவும், முதலீடுகளை பெருமளவில் எங்கள் மாநிலத்திற்கு அளித்திடவும் உங்களை கேட்டுக் கொள்ளும் விதமாக, இன்று நான் உரையாற்றுகிறேன்.

### பழம்பெரும் ஜனநாயக நாடுகள்!

இந்தியாவும் ஜப்பானும் ஆசியாவின் இரண்டு பெரிய மற்றும் பழம்பெரும் ஜனநாயக நாடுகள். குறிப்பாக சொல்லப்போனால், ஜப்பான் நாட்டின் அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவியை (Official Development Assistance - ODA) அதிகம் பெறும் நாடு இந்தியாதான்.

இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார உறவுகள், சமீப காலங்களில் மிகப்பெரும் எழுச்சி கண்டுள்ளது. இந்திய சந்தைக்குள் நுழையும் ஜப்பானிய நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தொடர்ச்சி 2–ஆம் பக்கம்

### பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடம்

## அ.தி.மு.க. அரசு தாரை வார்த்த ‘டெல்’ நிறுவனம் உற்பத்தியை தொடங்குகிறது!

### தமிழ்நாட்டை சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கக் கோரிக்கை!

*சென்னை, மே 30-*

*பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடம், அ.தி.மு.க. அரசு தாரை வார்த்த டெல் நிறுவனத்தில் அடுத்த மாதம் முதல் உற்பத்தி தொடங்க உள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமென டெல் நிறுவன முன்னாள் தொழிலாளர்கள் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*தமிழ்நாடு ஆந்திர எல்லையில் காட்பாடியை அடுத்த கிறிஸ்டியான்பேட்டையில், தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனமான டெல், 700 ஏக்கர் பரப்பளவில் கடந்த 1983ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தியாவில், மாநில அரசால் நடத்தப்படும் ஒரே வெடி மருந்து நிறுவனமாக திகழ்ந்த டெல், 1986ம் ஆண்டு உற்பத்தியை தொடங்கியது.*

*சாலை மேம்பாட்டுப் பணிகள், கால்வாய் வெட்டுதல், கிணறு தோண்டுதல், கல்குவாரி, சுரங்கத் தொழிலுக்கு பயன்படும் வெடிமருந்துகள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டன. டெல் நிறுவனம் உற்பத்தியை தொடங்கிய போது ஆயிரத்து 500 பேர் பணியாற்றினர். ஆரம்பத்தில் லாபகரமாக இயங்கிய டெல் நிறு வனம் படிப்படியாக நஷ்டத்தை சந்தித்தது. வி.ஆர்.எஸ். முறையில் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டனர்.*

*இறுதியாக 2017ம் ஆண்டு அக்டோபர் 1ம் தேதி அ.தி.மு.க. ஆட்சியின் போது டெல் நிறுவனம் மூடப்பட்டது. பின்னர், டெல் நிறுவனத்தை ஒன்றிய பாதுகாப்பு அமைச்சகத்தின் அருவங்காடு ராணுவ தொழிற்சாலை அதிகாரிகள் பார்வையிட்டு, அதனை தங்கள் வசம் எடுப்பதற்கான பேச்சுவார்த்தையை தமிழ்நாடு அரசுடன் மேற்கொண்டனர். இதில், இழுபறி ஏற்பட்டதால், டெல் நிறுவனத்தை அருவங்காடு ராணுவ தொழிற்சாலை நிர்வாகம் கையில் எடுக்கும் திட்டம் முடங்கி போனது.*

*பின்னர், ஆவின் நிறுவனம் வசம் டெல் நிறுவனத்தை ஒப்படைக்கும் திட்டமும் பரிசீலிக்கப்பட்டு நின்று போனது. இதனை அடுத்து, கடந்த 2018 செப்டம்பர் 26ம் தேதி தமிழ்நாடு அரசுடன், ஒன்றிய அரசின் பாரத் எலக்ட்ராானிக்ஸ் நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. அதன் படி, டெல் நிறுவனத்தை ரூ.50 கோடி முதலீட்டில் அந்நிறுவனம் குத்தகைக்கு எடுத்தது.*

*இதனை அடுத்து டெல் நிறுவன முன்னாள் தொழிலாளர்களின் வாரிசு தாரர்கள், உள்ளூர் இளைஞர்களுக்கு பணி வாய்ப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தொழிற்சாலை பாதுகாப்புப்பணிக்காக 30 முன்னாள் படைவீரர்களுக்கும், பழைய டெல் நிறுவனத்தை சேர்ந்த 5 பேருக்கும் மட்டுமே வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. உற்பத்தி, நிர்வாகம் உள்ளிட்ட தொழிற்சாலையின் மற்ற பிரிவுகளிலும் வெளிமாநிலங்களை சேர்ந்தவர்களே நிறைந்துள்ள னர். எனவே, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கவேண்டுமென டெல் நிறுவன முன்னாள் தொழிலாளர்கள் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.*

### 9 ஆண்டுகால ஆட்சியில் மக்களின் பணத்தை

## மோடி அரசு கொள்ளையடித்து விட்டது!

### காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மே 30-

மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க., ஆட்சியில் நாட்டின் பணவீக்கம் வரலாறு காணாத வகையில் அதிகரித்து விட்டதாக தெரிவித்துள்ளார். 9 ஆண்டுகால ஆட்சியில் நாட்டு மக்களின் பணத்தை கொள்ளையடித்ததே மோடி அரசின் சாதனை



என்று அவர் விமர்சித்துள்ளார்.

ஜி.எஸ்.டி., மூலம் அதிகளவில் வரி வசூலித்து மக்களை பாதிப்படைய செய்து விட்டார்கள் என்றும், இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, மக்கள் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறி, அதற்கு தீர்வு காணச் சொன்னால் ஒன்றிய ஆட்சியாளர்கள் ஆணவமான பதிலையே அளிப்பதாகவும் மல்லிகார்ஜுன கார்கே கண்டனம் தெரிவித்துள்ளார்.

### என்.வி.எஸ்.01


## செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தம்!

### இஸ்ரோ தலைவர் அறிவிப்பு

நெல்லூர், மே 30 –

என்.வி.எஸ்.01 செயற்கைக் கோள் வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் அறிவித்துள்ளார். ஸ்ரீஹரிகோட்டா, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (இஸ்ரோ) ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2வது ஏவுதளத்தில் இருந்து, என்.வி.எஸ்.01 செயற்கைகோளுடன் ‘ஜி.எஸ்.எல்.வி. எப்12’ ராக்கெட் இன்று காலை 10.42 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

என்.வி.எஸ்.01’ செயற்கைக் கோள் 2,232 கிலோ எடை கொண்டது. இதன் ஆயுட்காலம் 12 ஆண்டுகள். இதில் முதல்முறையாக உள்நாட்டு தொழில் நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட அணுக் கடிகாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.



இந்த நிலையில், ஜி.எஸ்.எல்.வி. எப்12 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்ட என்விஎஸ்01 வழிகாட்டி செயற்கைக்கோள் புவி ஒத்திசைவு பரிமாற்ற சுற்றுவட்டப்பதையில் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டதாக இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்துள்ளார். இந்த பணிகளில் சிறப்பாக செயல்பட்ட அனைவருக்கும் இஸ்ரோ தலைவர் நன்றியை தெரிவித்துள்ளார்.

இரண்டாம் தலைமுறை தொழில்நுட்பம் திறன் கொண்டது. கடல்சார் இருப்பிடம், பேரிடர் மேலாண்மை தகவல்களை வழங்கும்.

செல்போன்களுக்கான நேவிகேஷன் வசதி, அரசு, நிதி, மின்துறை நிறுவனங்களுக்கு தரவுகளை பெற முடியும் என்றும் இது மற்ற செயற்கைக்கோள்களுடன் சேர்ந்து தரை, கடல், வான்வெளி போக்குவரத்தைக் கண்காணிக்கும் என்றும் பேரிடர் காலங்களில் துல்லிய தகவல்களைத் தெரிவிக்கும் என்று இஸ்ரோ தகவல் தெரிவித்துள்ளது.